MASTER NEGATIVE NUMBER

6149.74

தனவைசிய ஊழியன்

மலர் 1, இதழ் 25

March 04, 1921

Record no. 148

Taṉavaiciya ūḻiyaṉ

Malar 1, itaḻ 25

March 04, 1921

Record no. 148

உ
சிவமயம்.
"தந்திவிலாசம் Oolian" Regd. No. M. 1509. "Dhana Vysia Oolian"

தனவைசிய ஊழியன்

வெள்ளி தோறும் வெளிவரும்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்—திருக்குறள்.

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்—திருக்குறள்.

மலர். க. காரைக்குடி ரௌத்ரி ஸ்ரீமாசிமீ உகவ (ச—ரு—ககூஉக) இதழ் உரு.

சமூக சீர்திருத்தம்.



கண்டமாணிக்கம் பட்டமங்கலம் கல்லல்
சொக்கநாதபுரத்திலுள்ள
கற்பகப்பிள்ளையார் கோவில் நகரத்தாரில் ஒருவகையார்

செய்திருக்கிற தீர்மானங்கள்.



க. கழுந்திருவிற்குப் பொன் கொடுப்பதற்கு மஞ்சள் குங்குமம் சந்தனம் புஷ்பம் தேங்காய் ககூ-க்குள்ளும் வாழைப்பழம் கறுக-க்குள்ளும் எலுமிச்சம்பழம் கoக-க்குள்ளும் [illegible] கொண்டு வரச்செய்கிறது. இதுபோல் நாமும் கொண்டுபோகிறது, ஐந்துவகைப் பலகாரம் செய்து வருகிறவர்களைச் சாப்பிடச்செய்கிறது, சம்பந்தியாருக்கு வாழைப்பழம் ருக-க்குள்ளும் பலகாரம் பெரிதில்லாமல் பந்திக்குப் போடுகிறமாதிரி [illegible] செய்து மேற்படி ஐந்துவகைப் பலகாரத்தில் வகைக்கு ரு.க-க்குள்ளும் கொடுக்கிறது. [illegible] விசேஷத்தில் பெண் வீட்டுக்காரரும் மாப்பிள்ளை வீட்டுக்காரரும் மேற்கண்டிருக்கிறதைத் தவிர வேறு எவ்வித சட்டி சாமான் வகையறாக்கொடுப்பதும் வாங்குவதுமில்லை. வெற்றிலையும் பாக்கு பெ. படி உ-க்குள்ளும் கொடுக்கிறது; பழம், பலகாரங்களுக்காக ரூபாய் கொடுப்பதும் வாங்குவதுமில்லை.

உ. கலியாணத்தில், வேவுதிருப்பூட்டுகிறது முதலான சகல முறைகளுக்கும், சட்டி சவுக்கம் கொட்டான் சில்லரைச்சாமான் பழம்வகையறாக்கொடுக்கிறதில்லை. திருப்பூட்டுகிறவர்கள் இசைகுடிமானம் எழுதுகிறவர்கள் மாமக்காரர் சடங்குக்காரர்களுக்கும் பெட்டியில் வெற்றிலை பாக்கு மட்டும் கொடுக்கிறது.

ங. கலியாணத்தில் பணமெழுதிய புள்ளிக்குப் பாக்குப்பணமும், பெண்பிள்ளைகளுக்குப் புள்ளி ஒன்றிற்கு பாக்கு வகையறாவிற்கு ஒரு ரூ. கொடுக்கிறது. வெற்றிலைபாக்கு எடுத்துப் போட்டுக் கொள்கிறது. மாமவேவு எடுத்துகிறவர்களுக்கு இனம் ஒன்றிற்கு வெற்றிலையுடன் சி. படி இரண்டிற்குள் பாக்கு மட்டும் பெட்டியில் கொடுக்கிறது. வேறு எவ்விதச் சாமானும் கொடுக்கிறதில்லை.

ச. பெண்ணழைத்த வீட்டிலும் வேவு எடுத்தின வீட்டிலும் நான்கு வகைக்குள் பலகாரம் சிறிதாகச் செய்து உபயோகிக்கிறது.

ரு. ருதுசடங்கிற்கு சர்க்கரை கற்கண்டு சீனி இவைகளில் ஒன்று அள்ளிவழங்குகிறது. பணம் சில்லரைச் சாமான் வகையறாக் கொடுக்கிறதில்லை.

சா. குழந்தை பிறந்த வீட்டில் சர்க்கரை சீனி கற்கண்டுஇவைகளில் ஒன்று அள்ளிவழங்குகிறது. வருகிறவர்கள் வெற்றிலை பாக்குபோட்டுக் கொள்ளுகிறது.

எ. விளையாட்டுப்பெட்டி வேவிற்கு பிள்ளைப்பானைச்சாதம் ஒரு வகை மட்டும் செய்து கொடுக்கிறது.

அ. காப்புக்கட்டுப் புதுமையில் சீனிபாக்கு வகையறாவிற்காகப்புள்ளி ஒன்றிற்கு ரூபாய் ஒன்றும், மறு புதுமைக்கு ரூபாய் அரையும் கொடுக்கிறது. பழமும் சட்டி சவுக்கம்வகையறாஎவ்விதச்சாமான்களும் கொடுக்கிறதில்லை. மாமவேவுஎடுத்துகிறவர்களுக்கு இனம் ஒன்றிற்கு வெற்றிலையுடன் சி. படி இரண்டிற்குள் பாக்கு பெட்டியில் கொடுக்கிறது. வேறெவ்வித சாமான்களும் கொடுக்கிறதில்லை. ஊருக்குள் சீனி வகையறாவும், அவைகட்காகப் பணமும் வாங்குவதுமில்லை கொடுப்பதுமில்லை.

கூ. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில்வைப்பதற்கு [illegible] தேங்காய் வாழைப்பழம் வெற்றிலைபாக்குநெல்கொண்டு போகிறது. மாமக்காரர் உபாத்தியாயருக்கு ரூபாய் ஒன்று கொடுக்கிறது. வந்தவர்களுக்கு கற்கண்டு சீனி சர்க்கரை இவைகளில் ஒன்றும் காப்பரிசியும் கொடுக்கிறது. பிள்ளைகள் மகார்நோன்பிற்குப் பணம்வாங்க வரும்போது மேற்கண்டவகைகளில் ஒன்று அள்ளி வழங்குகிறது.

ய. மகார்நோன்பிற்குப் பிள்ளைகளைச் சொந்தக்காரர் வீட்டிற்குக் கூட்டி வருவதற்கு மூன்று வகைக்குள் பலகாரமும் சாப்பாடும் வைத்துக்கொள்கிறது. கூடவருகிற பிள்ளைகளுக்கு பணம் சட்டி கொட்டான் வகையறாச் சில்லரைச்சாமான் கொடுக்கிறதில்லை.

கக. கார்த்திகைப் புதுமை திருவாதிரைப் புதுமையில்,வாழைப்பழம் பணியாரம் சிறிதாகச்செய்த திருவாதிரைத்தோசை இவைகள் சாப்பிடுகிறதைத்தவிர கையில் கொடுக்கிறதில்லை. மரவை வகையறா சில்லரைச்சாமானும் அவைகளுக்காகப் பணமும் கொடுக்கிறதில்லை.

கஉ. கலியாணம் [illegible] புதுமைக்கு ஊர்ப்பாக்கு வெற்றிலை வழக்கம்போல் கொடுக்கிறது.

கரு. கலியாணம புதுமை கார்த்திகைப் புதுமை திருவாதிரைப் புதுமை ஷஷ்டியப்தபூர்த்தி சதாபிஷேகம் கிரகப்பிரவேசம் முதலியவிசேஷங்களில், சுத்தபோஜனமாகப்பத்துவகைக்குள் கறியும் ௩-வகைக்குள் குழம்பும், ரசம் க-ம், பாயசம் ஒன்றும், வர்க்கான்னம் ஒன்றும் வடை அப்பளம் வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம் இவைகளுக்குள் அவரவர்கள் இஷ்டப்படி பந்தியில் உபயோகிக்கச்செய்கிறது.

கச. கழுத்துருவிற்குப் பொன் கொடுத்தல் பெண்ணழைத்தல் வேவு எடுத்தல் ருதுசடங்கு தீர்த்தம்ஜந்து மருந்து சாப்பிடுதல் பிரசவத்திற்குக் கூட்டிவருதல் முதலானவைகளில், மேற்கண்ட வகைக்குள் அவரவர்கள் இஷ்டப்படி இலையில் உபயோகிக்கச் செய்கிறது

கரு. கலியாணம் முதலிய விசேஷகாலங்களில் காலை[illegible] பலகாரம் நான்கு வகைக்குள் இலையில் உபயோகிக்கச்செய்கிறது. பழையபடிக்கு வகைக்கு உ-கறி[illegible] செய்கிறது.

கசு. தச்சுசெய்தல் நிலைவைத்தல் கிரகப்பிரவேசம் சுவீகாரப் புதுமை ஷஷ்டியப்த பூர்த்தி சதாபிஷேகம் இவைகளில் காளாஞ்சி மட்டும் கொடுக்கிறது.

கஎ. கிரகப்பிரவேசம் சஷ்டிபூர்த்தி சதாபிஷேகம் [illegible] சுவீகாரப்புதுமைகளில், நகரத்தார்கள் சாப்பாடு மாத்திரம் வைத்துக்கொள்ளுகிறது, தேங்காய் மூடியும் வாழைப்பழமும் கொடுக்கிறது. பெண்[illegible] வெற்றிலை பாக்குப் போட்டு[illegible]கிறது.

கஅ. கலியாணம் முதலிய சகல விசேஷங்களிலும் பழமும் சட்டியும் சில்லரைச் சாமான்களும் அதற்காகப் பணமும் கொடுக்கிறதில்லை. பூச்செண்டும் எலுமிச்சம் பழமும் கொடுக்கிறது.

கக. கலியாணம் புதுமை முதலிய சகல விசேஷங்களிலும், இரண்டு ஜதை மேளத்திற்குள் வைத்துக்கொள்ளுகிறது. மற்ற வாத்தியம் கதை கச்சேரி சதிர் முதலானவை நடத்துகிறதில்லை.

உ0. மாராயம் சொல்லுகிற வண்ணானுக்கு ருதுசடங்குக்கு ரூபாய் ௩-வ-ம், பிள்ளை பிறந்ததற்கு ரூபாய் [illegible], [illegible] சாப்பாடும் போடுகிறது. மற்றபடி ஒன்றுங் கொடுப்பதில்லை.

உக. பிள்ளை பிறந்த தென்று சொல்ல வருகிறவர்களுக்கு ரூபாய் ஐந்துக்குள் ஒரு ஜோடி வேட்டி கொடுக்கிறது.

உஉ. பலகாரம் வெற்றிலை மோர் வகையரு எந்தச்சாமானும் நமது பெண்பிள்ளை, பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே கொண்டுபோய் விற்கக்கூடாது.

உ௩. தானம் செய்கிற வீட்டில் ஊர் நகரத்தார் வெற்றிலைபாக்கு போட்டுக்கொள்கிறது.

உச. தின்மை சபிண்டி திதிகளில் சட்டி பாக்கு பணம் கொடுக்கிறதும் வாங்குகிறதுமில்லை.

உரு. தின்மைக்கு மட்டும் வடை பாயஸம் பழம் அப்பளம் வர்க்கான்னம் தேங்காய்ப்பூ வகையரு செய்கிறதில்லை. க0 வகைக் கறிக்குள்ளும் குழம்பு ௩ க்குள்ளும் ரசம் க-ம் செய்து உபயோகித்துக் கொள்ளுகிறது.

உசு. தின்மைக்கு நெல் எண்ணெய் வகையரு எண்ணெய் சி. படி ச-க்குள்ளும், [illegible] பெட்டியிலும், சீயக்காய் மஞ்சள் [illegible] புஷ்பம் பன்னீர் கொண்டு போகிறது. இதுபோல் கொண்டுவருகிறவர்களையும் கொண்டுவரச்செய்கிறது.

உஎ. [illegible] விசேஷத்தில் சட்டியும் பணமும் கொடுக்கிறதும் வாங்குகிறதுமில்லை. வெற்றிலை பாக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறது.

உஅ. [illegible] விசேஷங்களிலும் நான்கு வகைப் பலகாரமும் வாழைப்பழமும் காப்பியும் செய்து ஆண்பிள்ளைகள், பிள்ளைகள், பெண்பிள்ளைகள் எல்லாரும் இலைபோட்டுச் சாப்பிடுகிறது. கையில் கொடுக்கிறதில்லை. எந்த விசேஷத்திலும் எலுமிச்சம்பழம் பூச்செண்டு மட்டும் கொடுக்கிறது. வேறு யாதொன்றும் கொடுக்கிறதில்லை.

உக. மாப்பிள்ளை அழைக்கிறபோதும் பெண்ணழைக்கிறபோதும் மத்தாப்பு முதலிய வாணங்கள் உபயோகிக்கிறதில்லை.

௩0. மேற்கண்ட எல்லா விசேஷங்களிலும் விவரித்திருப்பதற்கு அதிகமின்றி அவரவர்கள் சௌகரியம்போல் செய்கிறது.

௩க. கலியாணம் முதலிய சகல விசேஷங்களிலும் மேற்கண்டபடி நமதுஊரிலும் அயலூர்களிலும் நாம் நடந்து கொள்ளுகிறது.

௩உ. மேற்கண்ட வகைகளுக்கு விரோதமாய் [illegible] [illegible]வர்களிடம் சிவஆதாயம் ரூ. க-வாங்குகிறது.

கற்பகப்பிள்ளையார்கோவில்நகரத்தார்.

காரைக்குடி, மாத்தூர்க்கோவில் நகரத்தாரவர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஐயா!

நாளிது தைமீ கூ-வம் உ௩-வம் நம் தனவைசிய ஊழியன் பேப்பரில், சொக்கலிங்கம்புதூர் நகரத்தாரவர்களும், கண்டனூர் நகரத்தாரவர்களும், கோனபட்டு நகரத்தாரவர்களும் காரைக்குடியில் கற்பகப்பிள்ளையார் கோவில் நகரத்தாரவர்களும் செய்திருக்கிற தீர்மானங்கள் வெளிவந்துள்ளன. அதுபோல் காரைக்குடியில் நம் மாத்தூர்க்கோவில் நகரத்தார்கள் எல்லோரும் கூட்டம்கூடி எந்த விசேஷ காலங்களிலும் அநுவசியமாய் நடந்துவரும் காரியங்களையும் அநுவசியமாயுள்ளசெலவு வகையருக்களையும்நிறுத்தியும், மற்றபடி நம் சமூக சீர்திருத்தமான விஷயங்களையும் பேசி முடிவடையும்படி செய்ய வேண்டிய தவசியமென்பது யாவரும் நன்குணர்ந்த விஷயமே. அதின்படி விஷயம் முடிவுக்கு வருமாறு ஸ்ரீ குகப்பெருமான் திருவருள் புரிவாராக.

சிவ. நா. நா. நாராயணன் செட்டி.

பணந்தின்னும் புலியை விரட்டியதார்?

நண்பர்காள்!

சொக்கலிங்கம்புதூர் சிறிய நகர். அதில் வசிக்கும் நகரவைசியர்களின் திறமையே திறமை. அந் நகரில் தங்கியிருந்த பணந்தின்னும் புலியை அயலூராரின் உதவியின்றி அவர்களே விரட்டிவிட்டது அறிவாளிகள் மெச்சத்தக்கதே.

சொ. புதூரைப்படுத்திருக்கும் வை[illegible] பிரபுக்கள் நிறைந்துள்ள நகரங்களில், இப்புலிகள் தங்கவிடங்கொடாமல் அத்துடன் பழைய அசட்டு வழக்கப் புலிகளையும் சேர்த்து விரட்டி விடுவார்களென்று நம்புகிறேன்.

இனி டம்பத்திற்கு வாங்கும் சமயல் சாமான்களும், போட்டிக்குவாங்கும் பிறநாட்டுச் சாமான்களும் விலைதணியும். வைசியகுலப் பெண்மணிகள் விற்பனை செய்யும் பலகாரங்கள் சொ. புதூரில் கிடைக்கா. இதனால் பெரிய கௌரவமுண்டு என்று சுங்குரும்பையிலிருந்து ஸ்ரீமான் அருணாசலம் முத்துப்பழனியப்ப செட்டியார் எழுதுகிறார்.

சமயப் பகுதி.

சிவராத்திரி விரதம்.

விரதாநுஷ்டானத்தினால் ஆத்மாவுக்கு மங்களகரமான ராத்திரியானதுபற்றி சிவராத்திரியென்றும், சிவபிரானைக்குறித்து விரதமிருக்கும் ராத்திரியாகலின் சிவராத்திரியென்றும், சிவபெருமானுடைய பூர்ணாநுக்ரஹத்தையும் பெறக்கூடிய ராத்திரியாகலின் சிவராத்திரியென்றும் வழங்கப் படுகின்றது.

* * *

சிருஷ்டி கர்த்தாகிய பிரமனுக்கும் ஸ்திதி கர்த்தாகிய விஷ்ணுவுக்கும், "குணம் தொழில் பிறப்பு இவற்றில், இரண்டு பேர்களிலும் யார் பெரியவராக இருக்கலாம்?" என்னும்விவாதம் உண்டாயிற்று. இந்த விவாதத்தை யநுசரித்து ராஜஸமேலீட்டால் பகைமையும் அதிகரித்தது; தேவர்களும் ரிஷிகளும் மத்யஸ்தத்துக்குச் சென்றும் சமாதானப்படுத்த முடியவில்லை. அதனால் தேவர்கள் இவ்விஷயத்தைக் குறித்துப் பரமசிவனைத் தியானித்துப் போற்றினார்கள். பரமசிவ மூர்த்தி அக்கினி யுருவமாக அவர்கட்கு முன்னர்த் தோன்றி அவ்விருவரையும் அநுக்ரஹித்து, ஸாத்விக குணத்தை தயவர்கட்குப் போதித்து, அவ்விருவர்களையும் ஸமாதானம் செய்து உலக சிருஷ்டி காரியமும் ரக்ஷணகாரியமும் இடையறாது நடந்தேறும்படி யநுக்ரகித்தருளினர். அன்றிரவு பிரம்ம விஷ்ணுக்கள் சாந்த சித்தர்களாயிருந்து சிவபூஜையை யாமந்தோறும் செய்துமுடித்து எப்போதுமுள்ள பிரசாந்த சித்தத்தையடைந்தார்கள். அன்றிரவுதான் சிவராத்திரி யென்பபடுவது.

* * *

இப்படியாகப்பிரம்ம விஷ்ணுக்கள் கர்வம் நீங்கப்பெற்று ஸாத்விக சித்தத்துடன் இருந்து சிவ பூஜையைச்செய்து ஞான [illegible]வாகிய சிவபெருமானால் ஸாத்விக ஞானமாகிய சிவஞானத்தை அருளப்பெற்ற தினமானது, மாக (மாசி) மாஸத்து கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி தினத்து இரவாகலின் அன்றைய இரவே சிவராத்திரியென்று அழைக்கப் படுகின்றது.

* * *

இந்த விரதத்தை அநுஷ்டித்து, அன்றிரவு நான்கு ஜாமங்களிலும், ஜாமந்தோறும் சிவபூஜையைச் செய்தவர்கள், ஸாத்விக ஞானத்தை யடைவார்கள். சிவபெருமான் மங்களகாருணையால், விரதத்தை யநுஷ்டித்தவர்கட்கு இஹஸௌக்யங்களாகிய தர்ம அர்த்த காமங்களை அருளிப் பரஸௌக்யமாகிய மோக்ஷத்தையும் அவசியம் அருளுவர். சிவராத்திரி விரதமிருந்து பயனடைந்த பெரியோர் கதைகள் பலவுண்டு. அவற்றில் அவசியமான ஒன்றைமாத்திரம் இங்குக்குறிப்போமாக.

* *

இமயத்தின் ஸமீபக்காட்டில் வசித்து வந்த குருத்ருஹன் என்னும் வேடன், ஒருநாள் வேட்டையில் பகலெல்லாம் அலைந்துதிரிந்தும் ஒன்றும் அகப்படாமையால் காட்டில் வெகுதூரம் செல்லும்படி நேர்ந்துவிட்டது! சூரியன் அஸ்தமித்தவுடன் வீட்டுக்குத் திரும்பவும் இருள் மூடிக்கொண்டு வழிதெரியாமல் மயங்கி அக்காட்டிலேயே ஒரு மரத்தடியில் தங்கினான்.

* * *

பகலில் ஆகாரமில்லாததனாலும் வீட்டில் குழந்தைகளுடைய நினைவுவந்ததினாலும் நித்திரை வாராமல் இருந்தான். அச்சமயம் ஒருபெண்மான் வந்தது. [illegible] எய்யப்போம்போது அம்மான், "நான் பூர்ண கர்ப்பிணி; எனது பர்த்தா [illegible]ஆகிய மற்றொரு மானும் [illegible]; அவைகள் [illegible] வருந்திவாடும். நான் சென்று அவைகட்கு சமாதானம் சொல்லி விட்டு விடியற்காலையில்அவசியம் வந்து சேர்கிறேன்" என்றது. வேடனுக்கு அந்த இரக்கமொழிகளைக் கேட்டவுடன் ஸாத்விகம் தோன்றி, அதன் வார்த்தையை நம்பி அதனைப் போகவிடுத்தான். அது போய்விட்டது.

* * *

அப்போது முதல்ஜாம முடிவு. ஆகையால், நித்திரை கொள்வோமே யென்று அங்குள்ள ஒரு மரத்தின் இலைகளை யுதிர்த்துப் படுத்தான். நித்திரை வரவில்லை. மறுபடியும் எழுந்து உட்கார்ந்தான். இரண்டாம்ஜாம முடிவில் ஒரு ஆண்மான் வந்தது. அதனை எய்யப்புறப் பட்டான். அதுவும் மேற்சொன்னவாறே ஸமாதானம் செய்து வாக்களித்து விட்டு உத்தரவுபெற்றுக் கொண்டு போய் விட்டது.

* *

பிறகு நித்திரை செய்யலாமென்று பின்னும் மரத்திலிருந்து புதிய இலைகளை யுதிர்த்துப் படுத்தான். நித்திரை வாவில்லை. அப்போது மூன்றுவதுஜாம முடிவு. அச்சமயம் ஒரு சிறுமான் வந்தது. எய்யப்போனான். அதுவும் ஸமாதானம் சொல்லி வாக்களித்துப்போகச் சிறிதுநேரத்தில் பொழுதும் விடிந்தது. இரவெல்லாம் தூங்கவேயில்லை.

* * *

மேலேபார்த்தான். சிவலிங்கமும் அதன் மேல்தானுதிர்த்துவிட்டவில்வதளங்களும் இருந்தன. ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்துசிவஸ்தோத்திரஞ்செய்தான். அப்போது அம்மூன்று மான்களும் வாக்குறுதிப்படியேவந்துசேர்ந்துவிட்டன. அவைகளைத் துதித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். வேடன் சிவநேசச் செல்வனாய் சிவபூஜா துரந்தரனாக இருந்து மறுபிறவியில் ஸ்ரீ ராம பக்தனாகிய குகனாகப் பிறந்தனன். அத்தமூன்றுமான்களும் பரம சிவத்தொண்டருக்குத் தொண்டு புரிந்தமையினால், மும்மான் தலையுடைய நக்ஷத்திரமாகிய மிருகசீர்ஷம் என்னும் நக்ஷத்திரமாக மாறி—



நாளென்செயும்! வினைதானென்
 செயும்! எனை நாடி வந்த
கோளென்செயும்! கொடுங்கூற்றென்
 செயும்! குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
 தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னே
 வந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

தனவைசிய ஊழியன்,
காரைக்குடி மாசி-மீ ௨௯

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர்.

இந்த, படத்தில் காணப்படுகிறவர் பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸதேவர். இம்மஹான் இந்நிலவுலகில் தோன்றி இன்றைக்கு ௯௰-வருஷங்கள் ஆகின்றன. இப்பெரியார் கலி சகஙரு-ம் வருஷத்துக்குச்சரியான நந்தன ஹூ மாசிமீ ககஉ சுக்லபக்ஷம் த்விதிகை புதவாரத்தன்று அவதரித்தருளினர். இவர் கருவிலே திருவுடையவர்; அதாவது பிறக்கும்போதே ஆத்மஞானமாகிய பெருஞ்செல்வத்துடன் வந்தவர். ஸாத்யச் செல்வமான ஆத்மஞானம் கைவரப்பெற்றவராதலால், ஸாதனச்செல்வங்களான தனம் தான்யம் பசு புத்ரர் பத்னி வித்யை க்ரஹ ஆராமங்களில் விருப்புக் கொள்ளாதவர்.

வங்காள தேசத்திலே ஹுக்ளி ஜில்லாவைச்சேர்ந்த காமார் புகூர் என்னும் கிராமத்தில் ஓர் உயர்ந்த வங்கநாட்டுவைதிகப்பிராமணருக்குப் புத்திரராகப் பிறந்தவர். கதாதரர் என்னும் இடுகுறிப்பெயருடையவர்.

பள்ளிக்கூடப் படிப்பு முறையானது புகழும் பொருளும் சம்பாதிப்பதற்கேயாம் என்று பாலியத்திலேயே யுணர்ந்து கொண்டமையால், பாலிய பருவத்திலேயே படிப்பு முறையை விட்டு நீங்கினவர். தமது தாய்ப் பாஷையில்கூட தமது பெயரையும் நன்கு எழுதத்தெரியாதவர். ஆனால் உயர்ந்த வேதார்த்தங்களை யெல்லாம் கேட்டவர்கட்கு-அவரவர்க்கு உரிய தொழிற் பழக்கங்களையே உதாரணமாகக்காட்டி, உண்மையான விஷயங்களைப் பொறுமையுடன் சொல்லி, அவரது சந்தேஹங்கள் தீரப்போதிக்கும் ஆற்றலுடையவர்.



தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானங்களை ஒருங்கே யுடையவர். சுகதுக்கம் சீதோஷ்ணம் விருப்பு வெறுப்பு புகழ்ச்சி இகழ்ச்சி நன்மை தீமை முதலிய வித்யாஸங்களை அறியாதவர். ஆதலால் பரமாத்மாவாகவே கொண்டாடப் படுகிறவர். ஏனெனில்,

"கன்றலும் கருதலும் கரும்ஞ்செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை பேசலும்
தின்றலும் சுவைத்தலும் தீமைசெய்தலும்
என்றிவை யிறைபால் இயற்கையல்லவே"

என்று திருமூலர் கூறியிருக்கின்றார்.

இவருக்குத் தேசாபிமானம் தேசசரித்திரங்களைப்படித்து வந்ததல்ல; பாஷாபிமானம் பாஷையின் இலக்கணங்களைக் கற்று வந்ததல்ல; மதாபிமானம் ஞான கலைகளைத்தேர்ந்து வந்ததல்ல; ஆனால் எல்லாம் இயற்கையாகவே யமைந்துள்ளன. தேசம் பாஷை மதம் இவற்றின் முன்னேற்றத்தைக் கோரிய கேள்விகட்கெல்லாம் தகுந்த விடையளித்திருக்கிறார். ஆகையினால் இந்திய தேசமும் இந்திய பாஷையும் இந்திய மதமும் முன்னேற்றமடைய வந்த முதற்பெருங் கடவுளேயாவர் இவர். இவர்க்குத்தெரியாத தத்வங்களும் இவர் ஆலோசனைக்கு வாராத யுக்திகளும் இவர் புத்திக்கு அகப்படாத தந்திரங்களும் உலகத்தில் இல்லை. எல்லாம் இயற்கையிலே யுணர்ந்தவர். எப்படியெனில்,

"எனக்கு நான்முகத் தொருவற்கும்
 யாரினும் உயர்ந்த
தனக்கும் வேறுள சராசரம்
 அனைத்திற்கும் தலைவன்
மனக்கு வந்தனன் வந்தன
 யாவையும் மறையோய் !
உனக்கும் இன்னதின் நல்லதொன்
 றில்லென உரைத்தான்."

என்றபடி, பிரஹ்லாதன் கூறியது போல் கடவுளை மனதிற் கொண்டு விட்டார். கடவுளும் அவர் மனதிற் குடிகொண்டு விட்டார். கடவுளில்லாது உலகம் முதல் ஒன்றுமில்லையாகலின், இப்பெரியார்க்கும் எல்லாம் தெரிந்தவையாயின.

இம்மஹான் தேசம் பாஷை மதம் இவற்றின்முன்னேற்றத்தைக்கோரிய தபஸையே செய்துகொண்டிருந்தார். அத்தபஸின் பிரயோஜனத்தையும் அடையக் காலம் வந்துநேர்ந்தது. எண்ணிய இவர் திண்ணியராகையினாலே எண்ணியாங் கெய்தப் பெற்றார். எப்படி? இவரிடம், அக்காலத்து ஆங்கில முறைப்படிப்பு அனைத்தும் கற்ற பிரபல மாணவர்களில் இருபதுபேர்கள், சீடர்களாகவந் தமர்ந்து இவரது உபதேசம்பெற்று, தந்நலங்களை மறுத்துவிட்டுத் தேசநலத்தையேகோரி மதப்பெருமையையே மதித்து பாஷாபிமானத்திலே பண்படைந்து, உலகினுக் குழைப்பதற்கென்றே உறுதிபூண்டு, காஷாயந் தரித்துப் புறப்பட்டுக்கனமாரியெனப் பிரஸங்கம் செய்யத் தலைப்பட்டனர். இச்சீடர்களுக்குள் சிகாமணிதான் நமது ஸ்வாமி விவேகாநந்தர்.

இப்பெரியாரது உபந்யாஸத்தினாலேயே மேல் நாட்டார் மடங்கினர். நம்மவரைக்கண்டு நடுங்கினர். இவரது உபந்யாஸத்தினாலேயே நமது மக்கள் அடிமைத்தனத்தை அறுத்தெறிந்து ஆத்ம சுதந்தர தேச சுதந்தர வழியை நாடிவருகின்றனர். இவரது உபந்யாசத்தினாலேயே நமது பண்டைப் பாஷைகளெல்லாம் நம்மவரால் திரும்பிப் பார்க்கப் பெறுகின்றன. இப்பெரியாரது உபந்யாஸமாரியாலும் இவரது குருவாகிய நமது மஹான் ஸ்ரீராமக்ருஷ்ணபரமஹம்ஸதேவரது உபதேச ஸாரத்தாலும், நமது இந்தியமக்கள் ஆத்மாநுபவ ஞானியாகிய மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றிச் செல்லும் பக்குவத்தை யடைந்திருக்கின்றனர்.

ஆக, ஸ்வாமி விவேகாநந்தரின் குருவாகிய ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸ தேவர், இந்திய தேச முன்னேற்றத்தின் பொருட்டு அவதாரம் செய்துள்ளவராகையால், மாணவர்களும் மற்றப் பெரியார்களும், அவரது சரித்திரத்தையும் உபதேசங்களையும்நன்குபடித்து ஆராய்ந்தறிந்து ஸநாதன தர்மப்பற்றுடையவர்களாகி, தேசம் பாஷை மதம் இவற்றுக்குத் தொண்டுசெய்ய முன்வருவார்களாக. இம்மஹானது ௯௰-வது பிறந்த தினம் நாளது மாசிமீ ௨௮-ந் தேதி வெள்ளிக்கிழமை வருகின்றதாகையால், ஸமரஸ ஸமயாபிமானிகள் யாவரும் அவரது ஜயந்தியை எங்கும் கொண்டாடிக் களிப்பார்களாக.

எண்டிசைக் காட்சி.

பிணங்குத்தந்தி.

உண்டியல் விலை ௱எ௰ு-க்குக் குறைவாக இருந்தகாலத்தில் தந்தி தேறக்குறைய வந்துகொண்டிருந்தது. இப்பொழுதுவிலை ௱அ௰-க்கு மேல் ஏறிவிட்டதாக தந்திவந்திருக்கின்றன. ஜனங்கள் மிகஆவலாக தந்தியை யெதிர்பார்க்கின்றனர். நமக்குத் தந்தி கொடுப்பவர்கள் மறக்கக் காரணமில்லை. அவர்கள் தங்களால் முடியாதென்று தெரிவிக்கவுமில்லை. மற்றொருவரைக்கொடுக்கும்படி கடிதமெழுதியிருக்கிறோம். அவர்களும் அப்படியேயானால் வாரந்தவறாது தந்தி வரும்படியான வேறு மார்க்கம் செய்வோம். நேயர்கள் சிலவாரங்கள் வரை பொறுத்திருத்தல் வேண்டும்.

படுமோசம்.

அ. ச. ஷண்முகஞ் செட்டியார் வேதாரண்யத்தில் சாதுக்கள் மடத்திலும் பிற இடங்களிலும் தாம்தான் எஸ். முருகப்ப செட்டியாரென்றும், தனவைசிய ஊழியன் பத்திராதிபர் என்றும் சொல்லிப் பணம் வாங்கித் திரிகிறாரென்றும் இன்னும்பலவிஷய விவரத்தோடு ஒரு கடிதம் இன்று கிடைத்திருக்கிறது. அடுத்தவாரம் அந்தக் கடிதம் வெளியிடுவோம்.

ஜனங்கட்குத் தெரியாது.

யூனியன் எலெக்ஷன் விஷயம் ஜனங்கட்குத் தெரியும்படியாகவிளம்பரம் செய்யவில்லை யென்று உடனடை பெற்ற பொதுக்கூட்டத்தாலும், சுமார் ௧௫௦ பேர் கையொப்பமிட்டனுப்பியிருக்கிறமகஜராலும் விளங்குகிறது. புதிதாக நடைபெறும் எலெக்ஷன்- சரியான முறையில் விளம்பரஞ் செய்யாதபடி நடைபெறும் எலெக்ஷன் எவ்வளவுதூரம் நியாயமோ? முதலாவது வார்டு எலெக்ஷன் சரியில்லை யென்று அந்த வார்டு ஜனங்கள்கூடி ஒரு மகஜர் டாலுக்போர்டின் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்களென்றுமறிகிறோம்.

எது முக்கியம் ?

ரிக்கார்டு சரியாக இருக்கிறது. "டாம் அடித்து விட்டேன்" என்பதற்கு சிலரிடம் கையொப்பம் வாங்கப்பட்டு ரிக்கார்டு தாக்கலாகியிருக்கிறது. ஆனால், ஜனங்கட்குத் தெரியாதென்று ௧௫௦ கையொப்பமிட்ட மகஜர் வந்திருக்கிறது. ஒரு அதிகாரி பொய்சொல்லமாட்டார். ஆனால் தகுந்த மனிதர்களான ௧௫௦ பேரும் பொய் சொல்ல மாட்டார்கள். 'டாம்' அடிக்கப்பட்டது உண்மை. ஜனங்கட்குக் கேளாதுபோனதும் உண்மைதான். இதிலொன்று கவனிக்க வேண்டும். டாம் அடிக்கவேண்டியது முக்கியமா? அல்லது ஜனங்கட்கு விஷயம் தெரியச் சொல்லவேண்டுவது முக்கியமா?

தந்திச் செய்தி.

சைகோன் மாசிமீ ௧௧௨
பிப்ரவரிமீ ௨௨ யன்று, உண்டியல் விலை நூற்று எழுபது என்று தான் அடித்தேன்.

இன்று மதராஸ் உண்டியல்விலை நூற்று எழுபது.

சிங்கப்பூர் வட்டம் ஒன்று.

முயலுக்கு மூன்றே கால்.

பொதுக்கூட்டங்கூடியும், பிரதிநிதிகளாகச் சிலர் சென்றும் அதன் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களைக்கண்டு வேண்டியவரை சொல்லியும், அவற்றை லட்சியம் செய்யாமல் எலெக்ஷன் நடந்தேயிருக்கிறது. அதிகாரவர்க்கத்தினர், "தாம்பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்பது போல், நல்லசந்தர்ப்பத்தில் நடவடிக்கை நடத்துவதைப் பார்த்திருக்கிறோம். மிகச்சிறிதான இவ்விஷயமும் அப்படி நடந்திருப்பது ஆச்சரியப்படத் தக்கதாகும்.

எட்டாந்தேதி எலெக்ஷன்.

இவ்வூரிலுள்ளவர்களில் பலரும் மார்ச்சுமீ ௮௨ ஐயனார்கோவில் உற்சவத்திற்குச் சென்றுவிடுவர். அந்த தினத்திலே இரண்டு வார்டுகட்கு எலெக்ஷன் நடைபெறுமென்றுதெரிகிறது. அதையும் பொதுஜனங்கள் கண்டித்திருக்கிறார்கள் அதுவும் முயலின் மூன்றுகாலாகத்தான் நடைபெறுமோ என்னவோ?

இதுதான் கௌரவமோ?

பொதுஜனங்களின் பிரதிநிதிகளாகச் சென்ற ஐவரும் "விசிட்டிங் கார்டு" அனுப்பிவிட்டு வாயிலில் நின்றுகொண்டிருக்க, எந்தவிதமான தகவலும் கொடுக்காமல் ஸ்ரீமாந் ராமலிங்கமுதலியாரவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள். "விசிட்டிங் கார்டு" அனுப்பிப் பார்க்கும் முறை ஒருவாறு புதிதாக இருந்தாலும் ஒரு இன்கம்டாக்ஸ் தாஸில்தார் இப்படி நடந்து கொண்டது கௌரவமாகுமா?

மற்றவை யெப்படியோ?

ஸ்ரீமாந் ராமலிங்க முதலியாரவர்களிடத்தில்கொடுக்கப்பட்ட (கலெக்டருடைய) கடிதம் அரை பர்லாங் தூரத்திற்குள்ளான யாத்திரையில் தவறிப்போய்விட்டது. நடைபெறவிருக்கும் ஓட் விஷயமாக V. E. என்று மேல்கவரில் போடப்பட்ட-அவசரமாகவாங்கிவரப்பட்ட-கடிதம் கீழே விழுந்து விட்டதென்றால், நீண்டபிரயாணம்செய்யவேண்டியதும் அடிக்கடி பல ரிக்கார்டுகளை சர்ச்சை செய்யவேண்டியதுமான அதிகாரத்திலிருக்குமிவர்கள்மற்றவைகளிலெப்படி நடந்துகொள்வார்களோ?

உள்ளூர்வர்த்தமானம்.

யூனியன் மெம்பர் எலெக்ஷன்.

இவ்வூர் யூனியனில் சுமார் ஒரு வருஷகாலமாகப்பல மெம்பர் ஸ்தானங்கள் காலியாகக் கிடந்தன. நேற்றுமுதல் எலெக்ஷன் செய்வதென வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இது விஷயம் சரியானபடி பகிரங்கப் படுத்தப்படவில்லை. ௨-௩-௨௩ல் கேட்டவர்கட்கு "௩-௪ தேதிகளில் நடைபெறலாம்" என்று யூனியன் சேர்மென் சொல்லியிருக்கிறார். ஜனங்கட்கு ௨-ந் தேதி வரை தெரியாது. பிற்பகல் ௬-மணிக்கு இவ்விஷயம் தெரிந்தபடியால், இதைப்பற்றி யோஜிப்பதற்கு மார்ச்சு மாதம் ௨-ந்தேதி புதன் கிழமை [illegible] ஒரு பொதுஜனக்கூட்டம் கூட்டப்பட்டது. அதில் "எலெக்ஷன் தேதி குறிப்பிட்டு வெளிப்படுத்தவில்லை" என்ற விஷயமாக ஒரு தீர்மானஞ்செய்து, தாலூகாபோர்டு ஜில்லா போர்டு மந்திரிகட்குத் தந்திகொடுத்ததோடு, ஸ்ரீமான் என். எஸ். வேங்கடராமையாவர்கள் ஸ்ரீமான் சு. ராம. மெ. [illegible] செட்டியாரவர்கள் ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் ஸ்ரீமான் மெ.நா. லெட்சுமணன்செட்டியாரவர்கள் ஸ்ரீமான் சொ. [illegible] செட்டியார் அவர்கள் ஆகிய ஐந்து பேர்களும டெபுடேஷனாகப் போய்த்தாலூகாபோர்டு பிரஸிடெண்டைக் கண்டு தகவல் சொல்லவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. அப்படியே ஐந்து பெயர்களும் [illegible] வியாழக்கிழமை காலையில் தேவகோட்டைக்குச் சென்று கண்டு விஷயங்களைச்சொல்ல, தாலூகா போர்டு பிரஸிடெண்டவர்கள் "உங்கள் விண்ணப்பங்களைக் கேட்டு முடிவு சொல்வதற்கு மிகக்கடினமான வேலையில் நானிருக்கிறபடியால் முடியவில்லை; ஆகலால், கடிதம் தருகிறே னென்று சொல்லி, "இங்கு எலெக்ஷன் சம்பந்தமாக வந்திருக்கும் இன்கம் டாக்ஸ் தாஸில்தார் ஸ்ரீமான் ராமலிங்கமுதலியாரவர்கட்கு ஒரு கடிதமெழுதி கவரின் மேற்புறத்தில் *V. E.* என்று பொறித்துக் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்டுவந்து கொடுப்பதற்கு இவ்வைவரும் ஸ்ரீமான் ராமலிங்கமுதலியார் தங்கியிருந்த ஜாகையின் முகப்பிலிருந்துகொண்டு அங்கிருந்த ஒருவரிடம் "விஸிட்டிங்கார்டு" ஐவருடைய பெயரையெழுதியனுப்பினார்கள். ஸ்ரீமான் ராமலிங்கமுதலியாரவர்கள் உள்ளேயிருந்து புறப்பட்டு வெளியே போய்விட்டார்கள். அவர்களை இவ்வைவரும் நேரே முன்னர் பார்த்ததில்லையாதலால், அவர்தாம் பார்க்கவேண்டியவரென்று கருதவில்லை. பிறகு அவர்தாம் ஸ்ரீமான் ராமலிங்கமுதலியாரென்று தெரிந்தபடியால், அவர் பின்னால்தொடர்ந்து சென்று யூனியனாபீஸுக்கு வருகிற வழியில் கடிதத்தைக் கொடுத்தார்கள். முதலியாரவர்களும் பெற்றுக்கொண்டு ஆபீஸிற்கு வரும்படி கூறினார்கள். அப்படியே ஐவரும் போனார்கள். அவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். கேட்டதற்கு "வழியில் கடிதம் தவறிவிட்டது" என்று பதில் கூறப்பட்டது. முதலியார் சொல்லியவிஷயம்அப்படியே தந்திமூலம் தாலூகாபோர்டு பிரஸிடெண்டுக்குத் தெரிவிக்கப்பெற்றது.

இதன்பிறகு போலிங் ஆபீஸராயிருந்த ஸ்ரீமான் உ. அ. உ. க. ராமசாமி செட்டியாரவர்களிடம், "போஸ்டாபீஸில் ௨-ந்தேதி ௮ மணிக்குமேல்தான் விளம்பரம் ஒட்டப்பட்டிருக்கிறது. ரிஜிஸ்டராபீசில் அன்று இரவு ௧0 மணிக்கே ஒட்டப்பட்டது. எலெக்ஷன் விஷயம் ஜனங்கட்கு நன்றாகத் தெரியாது. சரியாகப் பகிரங்கப் படுத்தாதபடியால் இன்று நடைபெறவிருக்கும் முதல் வார்டு எலெக்ஷனை மட்டும் பிறகொரு நாளைக்கு வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி," சரியானபடிவெளியிடப் படவில்லையென்பதற்கு தகவல்களாக ௧௦௦ பேரின் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும்கொடுத்தார்கள். ஸ்ரீமான் கே. எஸ். சுப்பிரமண்ய ஐயரவர்கள் தாம் காண்டிடேட்டாக நிற்க விரும்புவதாகவும் [illegible] முன்னமே அறிவிக்கப்படாததாலும் ஒட்டர்களைப்பார்க்கப்போதிய அவகாசமில்லை யென்றும் மாற்றிவைத்தால் சௌகர்யமாயிருக்குமென்றும்கேட்டுக் கொண்டார்கள். மாலை ௫ மணிக்குமேல் காண்டிடேட்டாக நின்ற செக்காலை ஸ்ரீமான் கிருஷ்ண ஐயரவர்களை அந்தவார்டு மெம்பராக நியமித்திருக்கிறார்களென்று தெரிகிறது. நிற்க;

நேற்று இரவு [illegible] மணிக்கு கலலுக்கட்டி மேல்கரையில் ஒரு பொதுஜனக் கூட்டம் கூடியது. வைசியமித்திரன் உதவிப் பத்திராதிபர் ஸ்ரீமான் ராமபத்ராசார்யா அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். "யூனியனும் நமது சுதந்தரமும்" என்னும் விஷயத்தை தனவைசிய ஊழியன் பத்ராதிபர் ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியாரவர்களும், "இப்போது நடைபெறும் எலெக்ஷன்" என்னும் விஷயத்தை ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் என். எஸ். வேங்கடராமய்யரவர்களும், "எனது அநுபவம்" என்பதை ஸ்ரீமான் பசலா கிருஷ்ணய்யரவர்களும் பேசினார்கள். பின்னர் "இன்று எலெக்ஷன் நடைபெற்றிருக்கிற முறையை எல்லாவிதத்தாலும் கண்டிக்கிறோம்" என்று ஒரு தீர்மானமும், "அடுத்து ஐயனார்கோவிலுக்கு இவ்வூர் ஜனங்களிற் பெரும்பாகம் போகவேண்டியவர்களாயிருப்பார்களாதலால், அடுத்து எவ்விதமான எலெக்ஷனும் செய்தல்கூடாது" என்றொரு தீர்மானமும், "வரி கொடுப்போர் சங்கம் ஒன்று வைக்கவேண்டியது மிக அவசியம்" என்று ஒரு தீர்மானமும் எல்லா ஜனங்களாலும் ஆக்ஷேபமின்றி ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டன. இன்று

கடைத்தெரு.

சென்னை.

மாசிமீ ௨௧௳

வெள்ளி விலை	௬௭॥ 0 0
பவுன் விலை	௧௭॥ 0 0
அமெரிக்கன் டாலர்	எ௧ 0 0

சீமைவிலை ரூபாய்'ஒன்றுக்கு பதினைந் தேகால் பென்ஸ்.

உள்ளூர்.

பவுன் விலை	௧௭॥ 0 0
வெள்ளி விலை	௧௦௦ 0 0
மதராஸ்உண்டியல் வட்டம்	0 ௧௨ 0
இரங்கூன் ஷை	௨ 0 0

தனவைசிய ஊழியர் சங்கம்.

'பங்குனிமீ ௩- ௪-தேதிகளாகிய புதன் வியாழன் கிழமைகளில், புதுவயலில், "தனவைசிய ஊழியர் சங்கக்கூட்டம் நடைபெறும்.

காரியதரிசி த. வ. சங்கத்தார்.

பகவான்
ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸ தேவரது

அ௩-வது பிறந்ததினக்கொண்டாட்டம்.

காரைக்குடி ஹிந்துமதாபிமான சங்கத்தில், நாளிது மாசிமீ ௨௮௳ மாலை, சென்னை தேசபக்தன் ஆசிரியர் ஸ்ரீமான் வ. வே. ஸுப்ரமண்ய ஐயரவர்களது அக்ராசனத்தில், பரமஹம்ஸதேவரது பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெறும். அவ்வமயம் பல அறிஞர்கள், பரமஹம்ஸதேவரது சரித்ரசம்பந்தமான உபந்யாஸங்கள் புரிவார்கள். அன்பர்கள் வரவேண்டுகிறோம்.

சங்கக் கட்டிடத்தின் வெளியில் கொட்டகை போடப்பட்டிருக்கிறது.

ஹிந்துமதாபிமான சங்கத்தார்.
காரைக்குடி.

நேமங்கோவிலில் திருட்டு.

நகரக் கோவில்களி லொன்றான நேமங்கோவிலில் சுமார் முப்பத்திராயிரம் ரூபாய்க்கு அதிகமான நகைகள் திருட்டுப் போயிருக்கின்றன. கோவிலிலுள்ள சிப்பந்திகள் சம்பந்தமாகவே திருட்டுநடைபெற்றிருக்கிறதென்று தெரிகிறது. போலீசாரும் நமது பிரமுகர்களும் மிகுந்த சிரத்தை யெடுத்து வேலை செய்கின்றனர். பாதிக்குமேல் வெளியாகி விட்டதென்றுமறிகிறோம்.

எதிரியில்லாமலே இரண்டாவது வார்டுக்கு கே.எல். சிங்காரவேலுபிள்ளை தெரிந்தெடுக்கப்பட்டார்.

இளைஞர் பகுதி.

மாணவச்சாரணர்கள்.

ஒரு நாட்டின் பிற்காலத்து வாழ்வும் தாழ்வும், அந்த நாட்டிலுள்ள இளைஞர்களைப் பின்பற்றியே இருக்கின்றன. வாலிபர்கள் தமது பாலிய பருவத்தில் நற்பழக்க முடையவர்களாய் ஸன்மார்க்கப்ரவர்த்தியில் இருந்தார்களாயின், அந்நாடு அவர்கள் காலத்தில் ஓங்கி உந்நத நிலையில் நின்று அஞ்சா நெஞ்சு படைத்து அகில உலகங்களையும் பணியச்செய்யும். வாலிபர்கள் தம்துவாலிபப்பருவத்தில் தீப்பழக்கங்கொண்டுதுன்மார்க்க ப்ரவர்த்தியிலிருந்தார்களாயின், அந்நாடு அவர்கள் காலத்தில் ஏங்கி நின்று அடிமைத்தனம் படைத்து பிறதேசத்தாரை உள்ளே நுழைவித்து அவர்கட்கு உழைத்துக்கொடுத்து அவர்கள் காலின்கீழ் தவிக்கிடக்கும். இவ்வுண்மை ஒவ்வொரு நாட்டின்-ஒவ்வொரு ஜாதியின்-ஒவ்வொரு வகுப்பாரின் சரித்திரங்களை ஊன்றி ஆராய்ந்து படித்தால் விளங்கும். அவற்றிலும் நமது நாட்டுச் சரித்திரம் நன்கு விளக்கிக்காட்டும். நமது முன்னோர்களில் பல வகுப்புத் தலைவர்களும், தமது பாலிய பருவத்தில், தங்கலத்திலும் தம்பெருமையிலும் தம்மதிகாரத்திலும் சிற்றின்பத்திலும் சிங்கார வேஷத்திலும் சிறியோர் சேர்க்கையிலும் அதிகபிரியங்கொண்டு அவற்றையே பெருநோக்கங்களாக வைத்துப்பிறைந்து வந்ததனாலே, தற்போது இவ்வடிமைத்தனத்தில் நின்று உழலவேண்டியிருக்கின்றது.

வாலிபர்கட்கு, சத்தியம் தபவு பொறை தருமம் கண்ணோட்டம் சித்தசுத்தி மெய் பக்தி அஞ்சா நெஞ்சு பரோபகாரத்தில் விருப்பு மரணபயமின்மை ஆன்ம அறிவு நிலையற்ற பொருள்களின் உண்மையறிவு இவைகள் அவசியம் வேண்டுவன. இவற்றையுடைய ஒருவன் பிற்காலத்தில் தன் குடும்பத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து வைப்பானென்பதில் சந்தேகமேயில்லை. பலர், தமது நாட்டையும், எல்லாவாலிபரும் தமது தேசத்தையும் உந்நத நிலையில் ஓங்க வைப்பார்களென்பதும் உண்மையேயாகும்.

உக்ரகுமார பாண்டியனது-பாலிய காலத்துக் குணங்களை யளவிட்டுக்கொண்டு வரும்போது, ஸ்ரீ பரஞ்சோதிமுனிவர் இரண்டு அழகான செய்யுட்களைப் பெய்திருக்கின்றனர். அவை இங்கு கவனிக்கத் தக்கன.

இத்தகு பண்பு சான்ற
நீர்மையால் இசைமை, நீதி,
வித்தகம், நல்ல உள்ள
முடைமை, மெய், வீறு, தெய்வ
பத்திமை, உலகத் கெல்லா
மகிழ்ச்சிசெய் பண்பு, சாந்த
சித்தம், எவ்வுயிர்க்கும் அன்பு
செய்கை, நல்லீகை, கல்வி.
வெல்லுதற் கரியார் தம்மை
வெல்லுதல், தேவ ராலும்
செல்லுதற் கரிய தேத்தும்
சென்றிடு திறையுங் கோடல்,
புல்லுதற் கரிய ஞாலம்
மாலைபோற் புயத்தி லேந்திச்
சொல்லுதற் கரிய வீரம்
உலகெலாஞ் சுமப்ப வைத்தல்.

என்று கூறியிருக்கிறார். இவற்றில் பல குணங்கள் மாணவர்க்கும் இளைஞர்கட்கும் இருக்கவேண்டுவன.

ஸ்ரீ ராமபிரான், தமது இளமைப் பருவத்தில், குருகுலவாச காலத்தில், ஸ்ரீ வஸிஷ்டர் ஆச்ரமத்துக்குச் சென்று பாடமோதித்திரும்பு காலத்தில்,

எதிர்வரு மவர்களை எமையுடை
இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர்
ஒளிரா,
எதுவினை? இடரிலை? இனிதுநு
மனையும்
மதிதரு குமரரும் வலியர்கொல்?
எனவே

கேட்டு அவர்க்குற்ற குறைகளை நீக்குவர் என்று கம்பநாடர் கூறியிருக்கிறார். இத்தன்மையே மாணவர்க்கும் இளைஞர்கட்கும் இருக்கவேண்டும் என்றுவேண்டுகின்றோம்.

பாடங்களையேனும் சரித்திரங்களையேனும் கற்பிக்கும்போது, உபாத்தியாயர்கள், இக்குணங்களை யாராய்ந்து விவரித்து, மாணவர்கட்குப்புகட்டவேண்டும். மற்றவிதமாகச் சிற்றின்ப நுகர்ச்சிக்கும் பேரின்ப உணர்ச்சிக்குமுரிய விஷயங்கள்வரின், அவற்றை அந்தரங்கமாக விரித்து விவரிக்காமல் செல்வதும் நலமாகும் என்று நினைக்கிறோம். சிற்றின்ப நுகர்ச்சியானது பிரகிருதி சம்பந்தமுடைய ஒவ்வொரு ஜீவனிலும் இயற்கையாகவே அமைந்துளது; பேரின்ப உணர்ச்சியானது ஒவ்வொரு இந்தியனுக்கும் பரம்பரைப் பழக்கத்தால் அமைந்துள்ளது. இவ்வுணர்ச்சிமுளையானது வயதேற ஏறவும், தர்மம் வளரவளரவும், நீதியநுசரிக்கஅநுசரிக்கவும், பலப்பட்டு வருமென்பதிற் றடையில்லை. ஆகவே, உபாத்தியாயர்கள் மாணவர்களைத் திருத்தவேண்டுவது சூக்ஷ்ம இந்திரியச் செயல்களாகிய குணங்களையேயாகும். குணதோஷங்களைப் பகுத்து அறிந்து இந்திரியங்களை நடத்துவதற்காகவே காவியங்களும் சரித்திரங்களும் ஸாதனங்களாகப் பெரியோர்களாற் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றை எடுத்துக்காட்டி-நடத்திக்காட்டி-நடந்து காட்டுபவர்களே ஆசாரியர்களாவார்கள்.

இந்த ஆசாரியர்களது உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றும் ஒன்றுபட்டனவாயிருந்தல் வேண்டும். இது அமையப்பெறாதார் ஆசாரியராகா ரென்பது சாஸ்திரக் கட்டளையும் பெரியோர் கொள்கையும் உலக அநுபவமுமாகும். இத்தகைய ஆசாரியர்களாலும் இவர் கீழ்ப்பழகிய மாணவர்களாலுமே ஒருநாடு திருத்தத்தை யடையவேண்டும். உயர்விலிருந்து வீழ்ந்துள்ள நம் இந்திய நாடு பரிஷ்கரிக்கப்படவேண்டுவதாயின், ஆசாரியர்களும் அவரது மாணவர்களும் ஒழுங்குபெற வேண்டுவதவசியமே யாகும்.

இவர்களில் மாணவர்களும் இளைஞர்களுமே, எடுத்த காரியங்களை ஊன்றிப்பார்த்து ஊக்கமுடன் செய்து வைக்கக்கூடியர்களாவார்கள். உண்மையையும் ஒழுக்கத்தையும் கைவிடாது போற்றக்கூடியவர்கள் ஆவார்கள். குடும்பக் கவலைகூடப் பெறாதவர்களாகலின், பொருளுக்காவது தாக்ஷிண்யத்துக்காவது உழைக்காமல் ஸத்யத்துக்கும் தர்மத்துக்குமே உழைப்பவர்களாகவும், அதிகாரத்துக்கும் ஆடம்பரத்துக்கும் பயப்படாமல் எடுத்த காரியத்தை இனிது முடிப்பவர்களாகவும் இருப்பார்கள். இவர்களே சாரணர்கள் என்றும், இவர்களில் மாணவர்களே மாணவச்சாரணர்களென்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களால் தேசப் பொதுஜனங்கட்கு நன்மையும் தேசத்தலைவர்கட்கு ஊக்கமும் தேசத்துக்குப் பெருமையும் தேசராஜாங்கத்துக்கு கவலையின்மையும் உண்டாகுகின்றன.

சமீபத்தில்கும்பகோணத்தில் நடந்தேறிய மஹாமக உத்ஸவத்தில் சுமார் ௫00 மாணவச்சாரணர்கள், சுமார் மூன்றரை லக்ஷம்வரை வந்திருந்த யாத்திரிகர்கட்கு ஸ்நானம் பானம் முதலிய சௌகர்யங்களில் உடன்துணையாயிருந்து, அப்பெருங் கூட்டத்தில், வயதுசென்றவர்களும் பெண்களும்குழந்தைகளும் அலைந்து வருந்தாமல், உதவி புரிந்ததைக் கேட்டு மிக மிக மகிழ்கிறோம். இதுவே நமது பாரதமக்களின் பெருந்தகையாகும். இவர்களால் பல போலீஸ் திருட்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டனவென்றும் அறிகிறோம். இவர்களை யொத்த இளைஞர்களாலேயே இனி நம் நாடு முன்னேற வேண்டியிருக்கிறது. இவர்கட்குத் தங்கல மறுப்பும் விடாமுயற்சியும் சத்யமும் தர்மமும் தேசாபிமானமும் பரோபகாரமும் முனைத்து நிற்கவேண்டியது அவசியமாகின்றது.

சாஸ்திரப் பகுதி.

உலக ஜனசமுதாய நிலை.

(இதழ்-கூ பக்கம் கூ-ம் தொடர்ச்சி.)

த. ராமகிருஷ்ணன் எழுதியது.

பல பேதப்பொருள்களைக் கருதி அலைந்தோடிமயங்கிநிற்கின்ற மனதை ஏகாக்கிரப்படுத்தி, சமநிலைப்படுத்தி சமத்துவத்தை நாட்டுவதன்றோ அறிவுடையோர் கடன். இதுவன்றோ உண்மை நூல்களின் முடிபு; அநுபவம். லட்சக்கணக்கான மனிதர்களை ஆண்டுவந்த மிகச் சிறப்பான மூளையையுடைய அறநிலை திரியா அரசர்களன்றோ இவ்வுண்மையை நிறுவியவர். ஜனகனை அறிவீர். காட்டில் இருந்து மௌனஞ்சாதித்து நடத்தலோ வேதாந்தமென்றுணர்கின்றீர்? பிரமஞானமென்றுணர்கின்றீர்! தூறுவபதனவும் ஜனசேவை செய்து நிற்றலன்றோ, தேசசேவை செய்து நிற்றலன்றோ, கர்மயோகம் என்று வேதம் போதிக்கின்றது. உலகம் பல பேதமென்றுரைத்து விட்டிருப்பதோ வேதம் உணர்ந்தோர் கடன்? பல பேதங்களாகத் தோற்றிய அர்ஜுனனுக்கு, 'பேதங்களெல்லாம் உனது கற்பனையே; பேதமற்ற நிலையை அறிவாயாக; நிராசையுடன் உன் கடமையைச்செய்வாயாக' என்ற கர்மயோகாகஸ்யத்தைப்போதித்தது வனத்திலா? அல்லது இராஜ்ய போகத்தை விரும்பி நிற்கும் யுத்தகளத்திலா? அன்பர்களே! யோசியுங்கள். ஆகவே, மக்களாயினோர் மதசம்பந்தமும் உலக சம்பந்தமும் ஒருங்கே பெற்றிருத்தல் அறனும் பொருளும் இன்பமும் அடைதற்கும், வேதமுடிபாகிய சமத்துவத்தை அநுசரிப்பதற்கும், இவ்வுலகத்தில் உரிமையுடைத்து. மெய்யுரை நூலாகிய வேதம் உங்களுக்கு என்ன போதிக்கின்றது?

'ப்ராஹ்மணோஸ்யமுகமாஸீத்
பாஹூ ராஜன்ய க்ருதஃ
ஊரு ததஸ்ய யத்வைஸ்யஃ
பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத''

யஜுர்வேதம் அத்தியாயம் ௩௧. மந்திரம் ௧௧.

"யாவன் விராட்புருஷனது சகல அவயவங்களிலும் முதன்மையான முகத்துக்கு நிகராகக் கல்வியும் நல்லொழுக்கமும் ஜீவகாருண்யமும் உடையவனாகவிருக்கின்றானோ அவனைப் பிராமணனென்றும்; யாவன் தோள் வலியினால் நீதிநெறி தவறாது அரசுபுரிந்தும் தேசத்தைக் காத்தும் ஏனையோர்க்கு உதவி புரிவானோ அவனை க்ஷத்திரியன் என்றும்; ஊருஎன்ற கடிஸ்தானத்தினது விபர்ல்பண்டங்களைசேகரித்தும்அவற்றைப் பிறநாடு சென்று மாற்றியும் உழுது பயிரிடல் பசுக்காத்தலாதிய செய்யுமவன் வைசியன் என்றும்; எல்லா அவயவங்களிலும் தாழ்ந்ததாகிய பாதத்திற்கு நிகராக உலகம் நடைபெறவேண்டிய ஊழியங்களைச் செய்பவன் சூத்திரனென்றும் கூறுகின்றான்." இக்கருத்தினை யுணராது நிராகாரமாய் எங்கும் நிறைந்து எல்லாமாய் விளங்குகின்ற புருடனது, "முகத்தில் பிராமணர்களும், தோளில் க்ஷத்திரியர்களும், தொடையில் வைசியர்களும், பாதத்தில் சூத்திரர்களும் பிறந்தார்கள்" என்று கூறி உண்மையற்ற உரை கற்பிக்கின்றனர். ஜன சமுதாயத்தில் ஒரு பகுதியினராகிய இவர்கள் முறையே முகத்திலும் தோளிலுமா உதித்தனர்? அங்ஙனமாயின் சகோதர சகோதரிகளாக மாட்டார்களா? மனுவினால் ஏழுதலைமுறைகள் வரையிலும் உடன் பிறந்தார் விவாகத்திற்குரியராகாரென கண்டிக்கப்படுகின்றனரன்றோ? பொருள்கள் இரகசியமாக மறைந்து நின்று அறிவுடையோர்களால்விளக்கப்படுதல் வேண்டுவதால், வேதம் மறை என்னும் சிறப்புப்பெயரும் பெற்றது. அத்தகைய மறையின்பொருளை மறைத்து இயற்கையே சாதிகள் வகுக்கப்பட்டன என்று கூறுவாருரை வெற்றுரையாம். "குணங்கள் தொழில்கள் இவற்றின் பிரிவுப்படி, நான் நால் வருண நெறியைப் படைத்தேன்" என்று வேதம் கற்பித்து நின்ற இவ்வுலகிற்கு, அப்போதைமையை அகற்றுவான் வேதத்தில் முன்பு கூறியது போலவே, இப்பொழுதும், "செயலின்றி அழிவின்றியிருக்கும் யானே அதனைச் செய்தேன்" என்று பகவான் மறுபடியும் கிருஷ்ணவதாரத்தில் வற்புறுத்துகின்றார்.

வேதங்கள் கடவுளை ஸ்துதிக்கும் வெறும் பாமாலைகளென்றும், பல தெய்வ வழிபாடுகளும் உயிர்க்கொலையாகிய யாகாதிகளுமே கூறுகின்றனவென்றும், பிராமண ரொழிந்தோர் படித்தற்கு உரியரல்லர் என்றும் சொல்லி இந்தியாவின் நாகரிகமாகிய தொழிலுலகத்தையே நசுக்கி விட்டனர். இத்தகைய வேதங்களை மேற்குத் திசையார்பலகாரணங்களாலும்இங்கிருந்து கொண்டுபோய், மோனியர் வில்லியம்ஸ் (Monier Williams) மாக்ஸ் முல்லர் (Max Mnller) க்ரிபித் (Griffith) முதலிய மேதாவிகள் ஆங்கிலம் முதலிய மேல்நாட்டு மொழிகளில் பரப்பிய காரணத்தானே, மேல்நாட்டுத்தொழில்கள் சிறந்துவிளங்குகின்றன என்று கூறுதல் மிகையாகாது. இப்பொழுது அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் கண்டு அற்புதமென்றுநாம்வியக்கின்றோம். இது நமது அறிவீனத்துக்கும் தவிர நம்மை ஏழைகளாக்கி நிற்பதற்கும் காரணமாகின்றது. நாம் மகரிஷிகளின் வம்சத்தில் வந்தவர்களென்றும் உலகத்தில் சிறந்தவர்களென்றும் நமது பாட்டன் பெயரைச் சொல்லிக்கொண்டு மகிழ்வடைகின்றோம். உண்மையில் சிராத்தம் என்ற பதத்தின் பொருளை உணர்ந்தோமானால்—நமது முன்னோர்களின் ஞாபகார்த்தமாக அவர்களையும் பின்பற்றுவோமானால்—திருவள்ளுவர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகாத்மா காந்தியடிகள், நமது முன்னோர்கள் என்று கருதுவோமானால்- ராமகிருஷ்ண பரஹம்ஸர் பயின்றிருந்த ஓர் அருமையான சிற்பத் தொழிலை ஏன் கற்கக்கூடாது? திருவள்ளுவரும் மகாத்மா காந்தியடிகளும் கையாண்டதும் ஆள்கின்றதுமாகிய பாவமற்ற நெய்தற்றொழிலை ஏன் பின்பற்றலாகாது? மருத்துவன் தாமோதரனார், கூலவாணிகன் சாத்தனார், நப்பூதனார், பொற்கொல்லன் வெண்ணாகனார் என்னும் தமிழ் நாட்டுச் சங்கப் புலவர்களும் அறிவுத்தொழிலையும் கைத்தொழிலையும் ஒருங்கே பெற்றிருந்தனரன்றோ?

நிற்க, வேதத்தின்பொருளைக்கீழ்த்திசைமுறையாலும்மேற்றிசை முறையாலும் உணர்ந்து ஜீவகாருண்ணிய மற்ற யாகாதி உணர்ச்சிகளையும் பல்வும்கண்ட மகரிஷி தயானந்த ஸரஸ்வதி சுவாமிகள் மனமுடைந்து துன்புற்று வேதங்களை ஆராய்ந்து "சத்யார்த்த ப்ரகாசம்" என்னும் ஓர் உரை இயற்றியருளினார். அவற்றுள் சிலவற்றை ஈண்டு உணர்த்துகிறேன். "வேதங்கள் ஆத்மீக முறையால் ஞானம் கர்மம் பக்தி என்று பிரிந்திருப்பது போலவே, இலௌகிக முறையிலும் இருக்கு வேதம் உலகப்பொருள்களின் இயற்கை செயற்கைத் தத்துவங்களையும் அந்தக்கரண தத்துவங்களையும், யசுர் வேதம் அவைகளைத் தொழிற்படுத்தும் முறைகளாகிய செயல்களையும் விளக்குகின்றன. இதனை இருக்கு வேதத்தி (க-உஎ-க) ல் 'அஸ்வம் அக்நிம்' என்பதால் அசுவவித்தை என்று கூறிக் குதிரை பழக்குகிற வித்தை என்றோ அல்லது யாகத்தில் கொல்லுகின்ற குதிரை என்றோ கொள்ளாது, பிரமாண்டத்தின் பெருங்கோளமாகிய சூரியன் உலகங்களெல்லாம்நிலைபெறுவதற்கு ஆதாரமாக அளிக்கின்ற மூன்று சக்திகளாகிய அக்நிசக்தி (Heat) அல்லது உஷ்ணம் பண்ணும் சக்தியையும், ஒளிசக்தி (Electricity) அல்லதுபிரகாச சக்தியையும், இரசாயன சக்தி (Magnetism) அல்லது வஸ்துக்களைச் சேர்க்கவும்பிரிக்கவும் கூடிய சக்தியையும் போன்ற அஸ்வ என்னும் அக்நியின் மூன்றுவித சக்திகளையும் தொழில்படுத்தும் வித்தையென்று கூறுகின்றது. இது மேல்நாட்டார், இயந்திரங்களின் சக்திகளுக்கு

(Horse-power) குதிரை வலிமை என்று குறிப்பிட்டிருப்பதை உணரச் செய்கின்றது. இன்னும் இருக்கு வேதம்: மண்டலம்-அ: சூக்தம்-நி: மந்திரம்-உஅ-ல், "ஓ விஸ்வகர்மாவே! நீ இந்த யானவித்தையை ஜனசமூகத்தில் பரப்புவாயாக; அவை சுவர்ணாதி லோகங்களாலும் காந்த சக்தியாலும் அமைக்கப்பட்டு, தரையிலும் வானத்திலும் நீரிலும் செல்வதற்குரிய வாகனங்களாவன" என்றும் கட்டளையிடுகின்றன. இன்னும் பல தொழில்களும் காணப்படுகின்றன."

வேதமுணர்ந்த மகரிஷிகள் தங்கிய பாரத நாடோ அல்லது பாதாள லோகமென்னும் அமெரிக்காவோ ஜெப்ளின் முதலிய ஆகாய விமானங்களைக் கண்டது? அர்ஜுனன் நாககன்னிகையை மணக்கப்பாதாள லோகத்துக்கு எவ்வழியாகச் சென்றான்? ஜெர்மனியரோ அல்லது நமது முன்னோர்களாகிய இராமாதியர்களோ புஷ்பகவிமானத்தில் சென்றது? இப்பொழுதும்நாம்பின்வாங்கியவர்களல்லர். ஆத்மசக்தியின் வலிமையை உணர்த்துகின்ற மகரிஷியாகிய மகாத்மா காந்தியடிகளையும், இயற்கைத் தத்துவங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகிற்குக் காட்டுகின்ற ஸ்ரீ ஜகதீச சந்திர போஸையும், செயற்கையாகிய இரசாயன தத்துவங்களையுணர்த்துகின்ற ஸ்ரீ பிரபுல்ல சந்திரரேயையும் நிகர்த்தோரை உலகில் எப்போதும் அறிவுடையோரால் காட்டவியலா என்பது துணிபு. இன்னோரைப் பின்பற்றும் நம்மவர் வெகு சிலரே. ஆ! இந்தியாவின் தொழிலுலகம் இங்ஙனம் மாய்கின்றதே! பரிதாபம்!! பரிதாபம்!!! வேதசாரங்களாகிய (வேதத்தின்) தத்துவங்களைச்சுருங்க உணர்த்திய கீதைக்கு, வைதீக பரமான உரைகள் பல இருக்க, இல்லற தர்மமே மற்றவைகளுக்கும் துணையாவதும் துறவறத்திற்கு சாதனமாகியதுமாம் என்றுகொள்ளாது, காவிவேஷ்டியும் மௌனம் சாதித்தலுமே வேதார்த்தம் எனக்கொண்டு மயங்கி நிற்றலையொழித்தற்காக வேதத்தை ஆராய்ந்த பெரியார், காலஞ்சென்ற திலகமகரிஷியும் கீதாரகஸ்யம் என்ற ஓர் உரை இயற்றியுள்ளார். இங்ஙனம் நமது முன்னோர்களையும் பெரியோர்களையும் புகழ்ந்துபாடுதல் பழங்கதை படிப்பதாகும். ஆயின், நாம் இப்பொழுது செய்யவேண்டுவதென்ன? மகரிஷி மகாத்மா காந்தியடிகளின் அடிச்சுவடு பற்றுதலாகும். பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர என்ற நான்கு சப்தங்களும் உலக முன்னேற்றத்திற்குரிய நால்வகைத் தர்மங்களைக் குறிக்கின்றன என்றுஉணர்ந்து, அவை வேதத்தில் சொல்லுவதாலும் சம்ஸ்க்ருத பாஷையிலிருப்பதாலும் நமக்கு மட்டிலும் உரிமையுடையதென்று கருதாது, இறைவனால் படைக்கப்பட்ட எல்லாத்தேசத்தார்க்கும் பொது என்று உணர்ந்து ஐரோப்பிய தேசங்களிலும் ஜப்பான் முதலிய கீழ்த்தேசங்களிலும் இத்தகைய வகுப்புகளையே அங்கமாகக் கொண்டு தேசம் முன்னேற்றமடைந்து வருகின்றன என்பதையும் கவனித்தல் வேண்டும். ஆகையினால், இந்த நான்கு பிரிவுகளும் எல்லா நாட்டிற்கும் இன்றியமையாதன. இவற்றுள் ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வு கிடையாது. ஒன்றையும் குறைக்கவும் முடியாது. ஒன்றற்கொன்று சங்கிலித்தொடர்போலிருக்கின்றன.

ஆகவே, உலகில் ஐந்திலொரு தொகையினராகிய நாம்—பாரத மாதா ஈன்ற புத்திரர்களாகிய நாம்- வேதம் முதலிய தத்துவ நூல்களின் உண்மையுணர்ந்து ஞானமாகியவாளினால் சாதிவித்தியாசம் என்னும் திரையை அறுத்துத்தள்ளி, அன்பென்னும் துணைவியைப் பெற்று சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நாட்டுவோமாக. பின்னர், அன்பு என்னும் துணைவி ஈன்ற அருள் என்னும் குழவியால் சுதந்தரமும் சுராஜ்யமும் உடனே பெறுவோம். வந்தேமாதரம்.

நமது சமூகமும் வீண் செலவும்.

நண்பர்களே!

நம்மவர் இப்பொழுது தம்முடைய தனத்தை ஒழுங்கான செலவுகள் செய்யவழிதெரியாமல், அநேகபெரிய வீடுகளைக்கட்டி அதில் மிகவும் அநாவசியமான சித்திரங்களையும் வரைந்து நம்முடைய செல்வத்தைச் செலவழிப்பதுமன்றி, இரவில் திருடர்கட்குப் பயந்து ஒரு மூலையில் யாவரும் உறங்கி விடுகின்றார்கள். வீடு மிகவும் பெரிதாய் இருப்பதால், திருடர்கள் வீட்டின் வேறு பக்கங்களிலிருந்து ஏறிக்குதித்தோ அல்லது கன்னம்வைத்தோ வீட்டிற்குள் புகுந்து, நம்முடைய பணத்தைப் போட்டு செலவுசெய்து கட்டிய பெரியகட்டிடத்தை நாசம் செய்வதுமன்றி, நம்முடைய பொருள்களையும்திருடிக்கொண்டு போகிறார்கள். ஆகையால், சிறிய வீடுகளைக்கட்டி அதில் வாழவேண்டும். ஆனால், நம்சகோதரர்கள் "கல்யாணம்முதலியபெரிய விசேஷங்களில்யாதுசெய்வது" என்று கேட்கலாம். அதற்கு ஒவ்வொரு ஊரிலும் உள்ள நகரத்தார்கள் கூட்டம் கூடி அவ்வூரிலுள்ள நகரத்தாரிடம் பொதுப்பணம் வாங்கி ஊருக்குப் பொதுவான ௧௦ அல்லது ௨௦ வீடுகளைக் கட்டிவைத்து விசேஷம் வரும்பொழுது விசேஷத்துக்குச் சொந்தக்காரர்களுடைய சாமான்களுடன் அங்கே சென்று விசேஷம் முடியும்வரை இருந்து, முடிந்தபின் வீட்டைக் காலிபண்ணி சுத்தம்செய்துவித்து பூட்டிவிடலாம். இப்பெரிய வீடுகள் காலியாக இருப்பதனால் திருடர்கள் அங்கு செல்வதற்கு காரணமில்லை. ஆகையால், சகோதரர்களே! இனிமேலாவது பெரிய வீடுகளை நம்முடைய பணத்தைச் செலவழித்து, கட்டுவது மன்றி திருடர்களுக்கும் பயப்படுவதைக் காட்டிலும் சிறியவீடுகளை சொற்பமான செல்வத்தைச் செலவழித்துக் கட்டி அதில் சுகமாக வாழலாமே.

M.S. Arunachalam.

ஒ. சிறுவயல் நகரத்தார்கட்கு ஓர் வேண்டுகோள்.

பெரியோர்களே!

விசேஷகால வீண் செலவுகளைக் குறைப்பதற்கு ஏற்பாடாக அநேக ஊர்களில் நடந்து வருவது "தனவைசிய ஊழியன்" மூலம்நன்கு புலப்படும். நிற்க அ. ராம. சு. வயி. சுப்பிரமணியன் என்பவர் தைமீ ௨௩உ பேரில் விசேஷகால வீண் செலவுகளைப்பற்றி நல்ல அபிப்ராயத்துடன் எழுதியிருந்தார். அதையும் நன்கு அறிவீர்கள். சகோதரர்களே! இதுவரை கவனியாதிருப்பதைப் பற்றி நான் வருந்துகிறேன். இனியேனும் அ. ராம சு. வயி. சுப்பிரமணியன் என்பவரும் முயற்சித்துக் காரியத்தைக் கைக்கொள்ளுமாறு சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

மலைச்சாரல்.

பூலாங்குறிச்சி நகரத்தார்கட்கு ஓர் விக்ஞாபனம்.

சகோதரர்களே! நம் சமூகம் முன்னேற்றமடைய வேண்டு மென்றெண்ணி, சில பிரபுக்களும் பெரியோர்களும் ஒன்றுசேர்ந்து நகரக்கூட்டம் கூடி விசேஷ காலங்களில் அதிகச் செலவைக்குறைப்பதற்காக ஓர் முடிவு செய்திருக்கிறார்களென்பது "தனவைசிய ஊழியன்" மூலம் தெரிய வருகிறது,

கனதனவான்களே! இவ்வூரிலும் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு நாளைக்குறிப்பிட்டுக் கூட்டம் கூடும் படியான ஏற்பாடு செய்து, அக்கூட்டத்தில் விஷயங்களைப் பேசி முடித்தால் ரொம்ப நன்மையாக இருக்கும். இவ்விஷயங்கள் ஊர்ப்பொது நன்மைக்கே யொழிய வேறில்லையே. நாளை கடத்திவிடப்படாது. இது விஷயத்தில் இவ்வூர் ஸ்ரீமான் வயி. சா. ராம. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் சிரத்தையெடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. விரைவில் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானங்களைச் செய்ய முன் வரவேண்டுகின்றேன்.

ராம. வ. மு.
லெட்சுமணன் செட்டி.

சந்தாவிபரம்.

இந்தியா முதலிய உள்நாடுகளுக்கு ஒரு ஒன்றுக்கு ...	௪	0	0
சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு ஒன்றுக்கு...	௫	0	0
தனிப்பிரதி ஒன்றுக்கு. ...	0	௧	௬

விளம்பர விகிதம்.

மாதம் ௧-க்கு பத்தி ௧-க்கு ...	௨0	0	0
ஷை அரைப்பத்திக்கு ...	௧௧	0	0

மானேஜர்,
தனவைசிய ஊழியன் ஆபீஸ்.
காரைக்குடி

சொ. முருகப்ப செட்டியாரவர்களால் காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சியற்றிப் பிரசுரஞ் செய்யப்பெற்றது.

END OF
ISSUE